ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2416/08 - 2024 දෙසැම්බර් මස 24 වැනි අඟහරුවාදා - 2024.12.24
*2416/08 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### கம்பளை நகர சபை அதிகார பிரதேசம், கங்க இஹல கோரளே பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதி மற்றும் உடபலாத்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தினை அங்கீகரித்தல்

நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர், அநுர கருணாதிலக்க ஆகிய எனக்கு, 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருந்தி அதிகாரசபை ( திருத்தப்பட்ட) சட்டத்தின் 8(F) பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய, 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபையினது பரிந்துரைகளை பரிசீலித்த பின்னர், கம்பளை நகரசபை அதிகாரப் பிரதேசம், கங்க இஹல கோரளே பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதி மற்றும் உடபலாத்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தி திட்டத்தின் அனுமதியினை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.

**அநுர கருணாதிலக்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
"செத்சிறிபாய", கட்டம்-II,
பத்தரமுல்லை,
2024, திசெம்பர மாதம் 17ஆம் திகதி.

EOG 12 - 0234/1

1A – PG 6955 – 19 (2024/12)
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## கம்பளை நகர சபை அதிகாரப் பிரதேசம், கங்க இஹல கோரளே பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதி மற்றும் உடபலாத்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதி தொடர்பான அறிவித்தல்

*1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை ( திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 8 (A) ஆம் பிரிவிற்கு அமைய ஒழுங்கு செய்யப்பட்ட, கம்பளை நகர சபை அதிகாரப் பிரதேசம் கங்க இஹல கோரளே பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதி மற்றும் உடபலாத்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டம் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி நகர அபிவிருத்தி நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக்க ஆகிய நான், குறித்த 1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை ( திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரிவு 8F இன் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய அனுமதி வழங்கினேன் என்பதை, குறிப்பிட்ட சட்டத்தின் 8(G) ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**அநுர கருணாதிலக்க** (பா. உ.),
*நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சு,*
*12 ஆவது மாடி,*
*"செத்சிறிபாய", கட்டம்-II,*
*பத்தரமுல்லை,*
*2024, திசெம்பர மாதம் 20ஆம் திகதி.*

EOG *12 - 0234/2*

---

## கம்பளை நகர சபை அதிகாரப் பிரதேசம், கங்க இஹல கோரளே பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஒரு பகுதி மற்றும் உடபலாத்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்திற்கு அங்கீகாரம்

*1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச்சபை சட்டத்தின் 8 (A) ஆம் பிரிவின் அதிகாரங்களுக்கு இணங்க கம்பளை நகர சபை அதிகாரப் பிரதேசம் கங்க இஹல கோரளே பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதி மற்றும் உடபலாத்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்திற்கு நகர அபிவிருத்தி நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக்க அவர்களினால் குறித்த சட்டத்தின் பிரிவு 8Fஆம் பிரிவிலிருந்து அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டது என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**பொறி.எல்.பி. குமுது லால்,**
*தலைவர்,*
*நகர அபிவிருத்தி அதிகார சபை.*

*2024, திசெம்பர் மாதம் 20ஆம் திகதி.*

EOG *12 - 0234/3*